(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை

3 சைவசமய பாடப்பரீட்சை : 2024

தரம் மூன்று



nselva.com

கால அளவு	1.00 மணி

புள்ளிகள் : 100

இல.
மாணவர் சுட்டெண்:

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

1. 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.

1) ஐந்து கரத்தினை உடைய வணக்கத்துக்குரிய கடவுள் யார்?

1) முருகன் 2) விஷ்ணு 3) விநாயகர்

2) ஆனைமுகனின் தந்தம் எதைப் போன்றது?

1) நந்தி 2) பிறைச்சந்திரன் 3) துதிக்கை

3) பொன்னார் மேனியனே..... எனும் திருப்பாடலைப் பாடியவர்.

1) அப்பர் 2) சுந்தரர் 3) சம்பந்தர்

4) புற இருளைப் போக்குவன எவை?

1) விளக்குகள் 2) சந்திரன் 3) நட்சத்திரங்கள்

5) ''பொள்ளாப்பிள்ளையார்'' என்பதன் பொருள் யாது?

1) உளியால் செதுக்கப்பட்டது 2) சிற்பியால் செதுக்கப்பட்டது.

3) தானாகத் தோன்றியது.

6) திருக்கோணேச்சர ஆலய இறைவியின் பெயர் யாது?

1) கௌரிஅம்பாள் 2) மாதுமை 3) முன்னை நாயகி

7) சிவசின்னங்களாகக் கொள்ளப்படுபவை?

1) சந்தனம், விபூதி 2) விபூதி, குங்குமம் 3) விபூதி, உருத்திராக்கம்

8) கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளன்று நடைபெறும் விழா எது?

1) கந்தவேள்விழா 2) சூரசங்காரவிழா 3) சூரபத்மன் விழா

9) சுந்தரமூர்த்தி நாயனார் வாழ்ந்து வந்த ஊர் எது?

1) திருவாரூர் 2) திருப்பெருந்துறை 3) திருவதிகை

10) நீற்றறையில் சமணர்களால் அடைக்கப்பட்ட நாயனார்?

1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர் 3) சுந்தரமூர்த்தி நாயனார்

11) பெரிய புராணம் யாரால் பாடப்பட்டது?

1) மாணிக்கவாசகர் 2) சேக்கிழார் 3) திருமூலர்

12) தேவாரப் பதிகங்களை திருமுறைகளாக தொகுத்தவர் யார்?

1) நம்பியாண்டார் நம்பி 2) அருணகிரிநாதர் 3) திருமாளிகைத்தேவர்

13) உலகநீதியை பாடியவர் யார்?

1) ஔவையார் 2) பாரதியார் 3) உலகநாதன்

14) முதன் முதலாக எழுதக் கற்க ஆரம்பிப்பதை எவ்வாறு அழைப்பர்?

1) சூரசங்காரம் 2) கிரகப்பிரவேசம் 3) வித்தியாரம்பம்

15) ''மகாபலி" என்ற பெருஞ்சக்கரவர்த்தியாக மாறியது எது?

1) சேவல் 2) மயில் 3) எலி

(15X2=30 புள்ளிகள்**)**

2. "அ" பகுதிக்குப் பொருத்தமானவற்றை "ஆ" பகுதியில் இருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

1. அன்னம் பாலிக்கும்	( )	1.	ஏடு தொடக்குதல்
2. கூற்றாயினவாறு	( )	2.	பொன்கட்டிகள்
3. நவராத்திரி	( )	3.	உணவு உண்ணமுன்
4. காளிங்கன்	( )	4.	சூலைநோய் நீங்கியபோது
5. சுந்தரமூர்த்தி நாயனார்	( )	5.	யமுனைநதி

(2 X 5 = 10 புள்ளிகள்**)**

3. சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் எழுதுக.

1) இறைவன் எழுந்தருளி அருள்பாலிக்கும் இடம் ஆலயம். ( )
2) விபூதி தாரணம் இரண்டு வகைப்படும். ( )
3) நவராத்திரி புரட்டாதி மாதம் சிறப்பாக கொண்டாடப்படும். ( )
4) மங்கையற்கரசியாருக்கு வெப்பு நோய் ஏற்பட்டது. ( )
5) யமுனை நதியில் கடம்ப மரம் நின்றது. ( )

(2X5= 10 புள்ளிகள்**)**

4. பின்வரும் வினாக்களுக்கு இரண்டு விடை எழுதுக.

1. சிவசின்னங்கள் இரண்டு -

....

2. ஆனைமுகனுக்கு வழங்கும் வேறு பெயர்கள்?

....

3. தேவாரம் பாடிய நாயனார்?

....

4. சைவ சமயத்தவர்கள் அனுட்டிக்கும் விரதங்கள்?

....

5. இலங்கையில் உள்ள பழைமை வாய்ந்த ஈச்சரங்கள்?

....

6. தீபங்கள் ஏற்றிக் கொண்டாடும் பண்டிகைகள்?

....

7. பிள்ளையாருக்குப் படைக்கும் விருப்பமான உணவுகள்?

....

8. நாம் ஆலயத்திற்குக் கொண்டு செல்லும் பொருட்கள்?

....

9. திருநாவுக்கரசருக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள்?

....

10. நாம் ஆலயத்தில் செய்யும் தொண்டுகள்?

....

(10X2= 20 புள்ளிகள்)

5. பின்வருவன பற்றி ஒவ்வொரு வாக்கியம் எழுதுக?

1. திருக்கோணேச்சரம் :-.....
2. தீபாவளி :-.....
3. கண்ணன் :-.....
4. கந்தசஷ்டி :-.....
5. நவராத்திரி :-.....

(5 x 2 = 10 புள்ளிகள்)

6. பின்வரும் திருப்பாடல்களின் இடைவெளிகளைப் பூர்த்தி செய்க.

காதலாகிக் ..... கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை ..... உய்ப்பது
..... நான்கினும் மெய்ப் பொருளாவது
.... நமச்சிவாயவே

(5X2= 10 புள்ளிகள்)

7. பின்வரும் பாடல்களில் வரும் இடைவெளிகளை நிரப்புக.

1. மாதாவை ..... மறக்க வேண்டாம்.
2. ..... செய்வாரோடு இணங்க வேண்டாம்.
3. ..... ஒரு நாளும் இருக்க வேண்டாம்.
4. ..... ஒரு நாளும் பழக வேண்டாம்.
5. ..... இல்லாரோடு இணங்க வேண்டாம்.

(5X2= 10 புள்ளிகள்)